**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.381/2021

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | செல்லத்துரை |
| Father's Name | : | புலியன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 66 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.01.2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் 1ம் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 23.07.1992ம் தேதியில் தென்காசி வட்டாட்டசியர் அலுவலக ஆதிதிராவிடர் நலத்துறை தனிவட்டாட்சியர் வாதிகளுக்கு வழங்கிய மனை எண்.92ன் இலவசமாக நிலத்தை ஒப்படைப்பு செய்த ஆவணம் நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. தென்காசி தாலுகா, ஆதிதிராவிடர் நலத்துறை தனிவட்டாட்சியர் வழங்கிய தபசில் சொத்துக்களை காண்பிக்கக்கூடிய Layout உண்மை நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 28.01.2021 தேதியில் 1ம் தபசில் உள்ள வாதிகளின் வீட்டிற்கு 1ம் வாதியின் பெயரில் விதிக்கப்பட் வீட்டு வரி ரசீது அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 23.09.2011 தேதியில் 1ம் தபசில் உள்ள வீட்டிற்கு 1ம் வாதியின் பெயரில் செலுத்தப்பட்ட குடிநீர் இணைப்பு ரசீது அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. 06.03.2018 தேதியில் 1ம் தபசில் உள்ள வீட்டிற்கு 1ம் வாதியின் பெயரில் செலுத்தப்பட்ட மின்கட்டண ரசீது அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
8. சர்வேயர் வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி